<u>இடைப்பாடி நகராட்சி</u>

<u>29.12.2022–ம் தேதியில் நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகளின் விபரம்</u>

பொருள் 1

இடைப்பாடி நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு 2022–2023ம் ஆண்டின் (Un-tied Grant) நிதி ஒதுக்கீட்டின் கீழ் பணியை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.16600/2022/CFC, நாள்.14.10.2022 ன் படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.52.42 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் விபரம் | தெரு விளக்குகளின் எண்ணிக்கை | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | இடைப்பாடி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதிய 20W 40W மற்றும் 60W LED மின் விளக்குகளை அமைத்தல் பணி. | 371 | 52.42 |
| 2. | இடைப்பாடி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதியதாக மின்வழி பாதையுடன் 20W 40W மற்றும் 60W LED மின் விளக்குகளை அமைத்தல் பணி. | 281 | |
| 3. | இடைப்பாடி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதிய மின் கம்பத்துடன் 20W, 40W மற்றும் 60W LED தெரு மின் விளக்குகளைஅமைத்தல் | 20 | |
| | **மொத்தம்** | **672** | **52.42** |

<u>அலுவலககுறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் விபரப்படி 15வது மத்திய நிதிக்குழு 2022–2023ம் ஆண்டின் (Un-tied Grant) நிதி ஒதுக்கீடு ரூ.52.42 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு விரிவான திட்ட அறிக்கையினை நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர், சேலம், அவர்களுக்கு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட பணிக்கு முன் அனுமதி வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1299/2022.இ1**

| **தீர்மான எண்:269** | **நாள். 29.12.2022** |
|---|---|
| அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது | |

பொருள் 2

இடைப்பாடி நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு 2021–2022ம் ஆண்டின் (Un-tied Grant) நிதி ஒதுக்கீட்டின் கீழ் பணியை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.31114/2021/CFC–1, நாள்.14.10.2022 ன் படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.72.10 இலட்சத்திற்கு தொழில்நுட்ப அனுமதி பெற்று, மேல் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் விபரம் | தெரு விளக்குகளின் எண்ணிக்கை | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | இடைப்பாடி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதிய மின் கம்பத்துடன் 20W, 40W மற்றும் 60W LED தெரு மின் விளக்குகளைஅமைத்தல் | 265 | 72.10 |

<u>அலுவலககுறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. 15வது மத்திய நிதிக்குழு 2021–2022ம் ஆண்டின் (Un-tied Grant) நிதி ஒதுக்கீடு ரூ.72.00 இலட்சம் மூலம் மேற்காணும் பணிகளை மேற்கொள்ளவும், கூடுதலாகும் செலவினத் தொகை ரூ.10,000/– யை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3. மேற்காணும் பணிகளுக்கு நகராட்சி நிர்வாக மண்டல செயற் பொறியாளர், சேலம் அவர்களிடம் தொழில்நுட்ப அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதிக்கலாம்
4. மேற்கண்ட பணிக்கு முன் அனுமதி வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1299/2022.இ1**

| தீர்மான எண்:270 | நாள். 29.12.2022 |
|---|---|
| அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது | |

பொருள் 3

அரசாணை (நிலை) எண்.145 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.2) துறை நாள்.14.10.2022–ல் மாநில நகர்ப்புற உட்கட்மைப்பு அபிவிருத்தி நிதியின் கீழ் 8 மாநகராட்சி மற்றும் 79 நகராட்சிகளில் உள்ள சுமார் 3,00,796 மின் சிக்கனமற்ற சாதாரண, தெரு விளக்குகளை மாற்றி, மின் சிக்கன தெருவிளக்குகளான LED விளக்குகளை பொருத்த, சுமார் ரூ.342.85 கோடிகள் தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் லிமிடெட் வாயிலாக கடன் பெற்று பணியினை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் இடைப்பாடி நகராட்சியில் உள்ள சுமார் 1978 மின் சிக்கனமற்ற தெரு விளக்குகளை அப்புறப்படுத்திவிட்டு, மின் சிக்கன LED தெரு விளக்குகளாக மாற்றியமைப்பதன் மூலம் சுமார் 11% மின் கட்டணம் சேமிக்கப்படும். எனவே, இப்பணிக்கு இடைப்பாடி நகராட்சிக்கு மதிப்பீடு தொகை ரூ.299.34 இலட்சம் நிதி அனுமதிக்கப்பட்டுள்ளது. பெறப்படும் நிதிக்கு வருடத்திற்கு 5% வீதம் வட்டியும், அசலையும் 6 வருட காலங்களில் திரும்ப செலுத்தவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட நடவடிக்கைகள் காரணமாக 11% வரை மின் கட்டணம் சேமிக்கலாம். அவ்வாறு சேமிக்கப்படும் நிதியினை பயன்படுத்தி கடனை வட்டியுடன் திரும்ப செலுத்தவும், இப்பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1978 தெரு விளக்குகளை புதிய LED தெரு விளக்குகளாக மாற்றம் செய்ய தேவைப்படும் நிதி ரூ. 299.34 இலட்சத்திளை TUFIDCO நிறுவனத்திடமிருந்து வருடத்திற்கு 5% வட்டி விகிதத்தில் பெறவும், அதை 6 ஆண்டுகளில் திரும்ப செலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1242/2022.இ1**

| தீர்மான எண்:271 | நாள். 29.12.2022 |
|---|---|
| அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது | |

பொருள் 4

இடைப்பாடி நகாரட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் 2022–2023ம் ஆண்டின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் பணியை மேற்கொள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (SS&FC) துறை அரசாணை எண்(4D) எண்.18, நாள்.21.10.2022ன் படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.31.00 இலட்சத்திற்கு தொழில்நுட்ப அனுமதி பெற்று, மேல் நடவடிக்கை மேற்கொள்ளவும் தொடரவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | ஒதுக்கீடு தொகை | கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் பங்கு தொகை | அம்ரூட் 2.0 திட்டத்தின் பங்கு தொகை |
|---|---|---|---|---|
| 1 | இடைப்பாடி நகராட்சி வார்டு எண்.22, SF No.446/7 தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பகுதி 2ல் புதிய பூங்கா அமைத்தல் பணி | 31.00 | 6.00 | 25.00 |

**அலுவலககுறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்காணும் பணிக்கு கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் 2022–2023ம் ஆண்டின் நிதி ஒதுக்கீடு கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் பங்கு தொகை ரூ.6.00 இலட்சம் மற்றும் அம்ரூட் 2.0 திட்டத்தின் பங்கு தொகை ரூ.25.00 இலட்சம் ஆக மொத்தம் ரூ.31.00

இலட்சத்திற்கு உரிய தொழில்நுட்ப அனுமதி பெறும் பொருட்டு விரிவான திட்ட அறிக்கையினை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களுக்கு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்

3. மேற்கண்ட பணிக்கு முன் அனுமதி வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 639/2022/இ2)**

| **தீர்மான எண்:272** | **நாள். 29.12.2022** |
|---|---|
| அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது | |

பொருள் 5

இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையம் அருகில் கட்டப்பட்டுள்ள ஜெ.ஜெ. வணிக வளாக TUFIDCO திட்ட கடை எண்.44,73,75 ஆகிய மூன்று கடைகளுக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 08.11.2022ந் தேதி நடைபெற்றதில் மேற்கண்ட கடைகளுக்கு ஏலம் கோர எவரும் முன் வராத நிலையில் ஒப்பந்தப்புள்ளி கேள்விகள் பெறப்பட்டதன் ஒப்பு நோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | கடையின் விபரம் | ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியவர்களின் பெயர் மற்றும் முகவரி | பழைய வாடகை | தற்போதைய உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வி | உச்ச ஏலக் கேள்வி |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | TUFIDCO திட்ட கடை எண்.44 | திருமதி.N.சசிரேகா க/பெ.குப்புராஜீ, 14R, மோட்டூர் காட்டுவளவு, இடைப்பாடி | 3600 | 3650 | – |
| | | திரு.ப.பாலகிருஷ்ணன் த/பெ.படவெட்டி, 3/199, நத்தம்பட்டி, மேல்தெரு, சித்தூர், இடைப்பாடி | – | 3600 | – |
| 2 | TUFIDCO திட்ட கடை எண்.73 | திரு.கா.நத்தகுமார், த/பெ.காவேரி, 7/11, கவுண்டர்தெரு, வட்ராம்பாளையம், ஒக்கிலிப்பட்டி(அ), காவேரிப்பட்டி | 1720 | 1740 | – |
| | | திரு.எம்.பெருமாள் த/பெ.மாரியப்பன், 6/108, மீன்வாயன்காடு, வட்ராம்பாளையம், ஒக்கிலிப்பட்டி(அ), காவேரிப்பட்டி | – | 1680 | – |
| 3 | TUFIDCO திட்ட கடை எண்.75 | திரு.மா.பெருமாள், த/பெ.மாரியப்பன், 6/108, மீன்வாயன்காடு , வட்ராம்பாளையம், ஒக்கிலிப்பட்டி(அ), காவேரிப்பட்டி | 1580 | 1750 | – |
| | | திரு.கே.நந்தகுமார், த/பெ.காவேரி, 7/77, கவுண்டர்தெரு, வட்ராம்பாளையம், ஒக்கிலிப்பட்டி(அ), காவேரிப்பட்டி | – | 1400 | – |

அலுவலககுறிப்பு

அ) வ.எண்.1 பேருந்து நிலைய ஜெ.ஜெ.வணிக வளாக TUFIDCO திட்ட கடை .44க்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளி கேள்விகளில் திருமதி.என்.சசிரேகா க/பெ.குப்புராஜ், இடைப்பாடி என்பவரின் உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வியானது மற்ற ஒப்பந்தப்புள்ளி ஒப்பந்தப்புள்ளி கேள்வியைவிட அதிகமாக உள்ளது. மேலும் இவ்உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வியானது பழைய வாடகையைவிட கூடுதலாக உள்ளதால் இவ்உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வியை மன்றம் ஏற்கலாம்.

ஆ) வ.எண்.2 பேருந்து நிலைய ஜெ.ஜெ.வணிக வளாக TUFIDCO திட்ட கடை .73–க்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளி கேள்விகளில் திரு.கா.நந்தகுமார் த/பெ.காவேரி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி கேள்வியானது மற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வியை அதிகமாகவும், பழைய வாடகையைவிட கூடுதலாக உள்ளதாலும் இவ்உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வியை மன்றம் ஏற்கலாம்.

இ) வ.எண்.3 பேருந்து நிலைய ஜெ.ஜெ.வணிக வளாக TUFIDCO திட்ட கடை .75க்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளி கேள்வியாக கோரிய திரு.எம்.பெருமாள் த/பெ.மாரியப்பன் என்பவரின் ஏலக்கேள்வியானது மற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வியைவிட அதிகமாகவும், பழைய வாடகையைவிட கூடுதலாக உள்ளதால் இவ்உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வியை மன்றம் ஏற்கலாம்.

ஈ) அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வி கோரிய கடை எண்.44,73,75 ஆகிய மூன்று கடைகளை ஒப்படைப்பு செய்ய மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.

(ந.க.எண்43/2021/பி4)

| தீர்மான எண்:273 | நாள். 29.12.2022 |
|---|---|
| அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது | |

பொருள் 6

இந்நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனமான வாரசந்தையினை 31.10.2022ந் தேதியுடன் ஓர் ஆண்டு காலம் முடிவடைந்து விட்ட படியால் அரசாணை நிலை எண்.92, நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்.03.07.2007 ல் தெரிவித்துள்ளவாறு , தற்போதைய குத்தகை தொகையில் இருந்து 01.11.2022 முதல 31.10.2022 வரையிலான காலங்களுக்கு தற்போதைய குத்தகை தொகையில் இருந்து ஓர் ஆண்டு காலங்களுக்கு 5% சதவீதம் உயர்வு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | மூன்றாண்டு குத்தகையின் விபரம் | மூன்றாண்டு குத்தகைதாரரின் பெயர் மற்றும் முகவரி | தற்போது செலுத்தி வரும் குத்தகை தொகை | அரசாணை எண்.92, ந.நி.ம.கு.வ.துறை நாள்.03.07.2007படி 5% சதவீதம் உயர்வு | 01.11.22 முதல் பிரதி மாதம் மற்றும் செலுத்தப்பட வேண்டிய குத்தகை தொகை (சேவைவரி நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | வாரசந்தை குத்தகை உரிமம் | திரு.E.P.நாராயணன் எல்லாக்காவளவு, ஆலச்சம்பாளையம், இடைப்பாடி | 625500 | 31275 | 54731 |

அலுவலககுறிப்பு

இந்நகராட்சியின் வாரசந்தை குத்தகை உரிமம் காலம் 31.10.2022ந் தேதியுடன் முதல் ஓர் ஆண்டு காலம் முடிவடைந்து விட்ட படியால் மேற்காணும் வரியில்லா இனத்தின் இழப்பீட்டை கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று 01.11.2022ந் தேதி முதல் 31.10.2023 வரையிலான இரண்டாவது ஓர் ஆண்டு காலத்திற்கு தற்போதைய குத்தகை தொகையில் இருந்து 5% சதவீதம் குத்தகை தொகையினை உயர்வு செய்ததை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.2627/2020/பி4)

| தீர்மான எண்:274 | நாள். 29.12.2022 |
|---|---|
| அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது | |

பொருள் 7

இடைப்பாடி நகராட்சியில் பேருந்து நிலையத்தில் உள்ள கடை கட்டிடங்கள் பழுதடைந்து சிமெண்ட் பூச்சுகள் பெயர்ந்து விழுகின்ற நிலையில் உள்ளது. இதனால் கட்டிடத்தின் உறுதி தன்மையை அறிய அரசு பொறியியல் கல்லூரி கட்டிட பொறியியல் வல்லுநர்கள் மூலம் ஆய்வு செய்யப்பட்டது. மேற்கண்ட ஆய்வின் 05.05.2022ஆம் தேதி அறிக்கைபடி பேருந்து நிலைய வளாக கட்டிடங்கள் பழுதடைந்து காணப்படுவதால் அவற்றை இடித்துவிட்டு புதிய பேருந்து நிலைய கட்டடிங்கள் கட்ட

தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பழைய கட்டிடங்கள் இடித்து அப்புறப்படுத்தவும் புதிய பேருந்து நிலைய கடை கட்டிடங்கள் பேருந்து நிறுத்த தடங்கள் வாகனங்கள் நிறுத்துமிடம், பேருந்துகள் செல்லும் சிமெண்ட் தளம் அமைத்தல் ஆகியன அமைத்து பொது மக்கள் பயன் பெறுவதுடன் நகராட்சிக்கு வருவாய் அதிகரிக்கும் வகையிலும் தரைதளம் மற்றும் முதல் தன கட்டிடங்கள் அமைக்க வகை செய்யப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு புதிய பேருந்து நிலைய வளாகம், கட்டிடங்கள் தற்சமயம் பேருந்து நிலையம் இயங்கி வரும் வார்டு எண். 15, இ பிளாக் 9, 10, 19 சர்வே எண்.83, (A1, A4, A5) 84/2A2 இடத்தில் ரூ.500.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் அமைக்க திட்ட பிரேரனை தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்காணும் பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை எடுத்ததை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.421/2022/இ2)

| தீர்மான எண்:275 | நாள். 29.12.2022 |
|---|---|
| அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது | |

பொருள் 8

இடைப்பாடி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகரில் குப்பைகள் அகற்றும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் K.Dis No.28369/J3 நாள் 04.12.2018–ன் படி தூய்மை பணியாளர்களை தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியில் நியமித்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியர் சேலம் அவர்களின் தினகூலி நிர்ணயம் அடிப்படையில் ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ409/– வீதமும் மேலும் ESI, EPF, Insurance, Uniforms, Safety Equipments மற்றும் Administrative Charges சேர்த்து சட்டபடியான விதிகளுக்குட்பட்டு 70 பணியாளர்களை தூய்மை பணி மேற்கொள்ள கடந்த 01.07.2021 முதல் 30.06.2022 வரை ஓராண்டிற்கு ரிலையான் பெசாலிட்டி சர்வீசஸ், சென்னை அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டும், 01.07.2022 முதல் 30.09.2022 மற்றும் 01.10.2022 முதல் 31.12.2022 வரை தலா மூன்று மாதகாலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கப்பட்டது. தற்போது 31.12.2022–ம் தேதியுடன் மேற்படி பணிகாலம் முடிவடையவுள்ளதால், பொது சுகாதாரப்பணிகள் பாதிப்படையாமல் இருக்க மேலும் 01.01.2023 முதல் 31.03.2023 வரை மேலும் மூன்று மாதகாலத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட ஊதியத்தின் அடிப்படையிலும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு 70 பணியாளர்களை தூய்மை பணி செய்ய ரிலையான் பெசாலிட்டி சர்வீசஸ், சென்னை அவர்களுக்கு பணி நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ35.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கும் இவ்வலுவலக ந.க.எண்.1816/2021/எச்1, நாள்.16.12.2022 ஆம் தேதியில் பணியாளர்கள் மற்றும் வாகனங்களுக்கு செயல்திறன் அடிப்படையில் 3 ஆண்டுகளுக்கு கருத்துரு தயார் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி ஒப்பந்தகாலமோ அல்லது நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் வெளிக்கொணர்வு ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் செய்ய அனுமதி பெறப்படுகிறதோ இதில் எது முன்னர் வருகிறதோ அதுவரை ஏற்கனவே உள்ள வெளிக்கொணர்வு முகமை பணி மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 37/ 2021 / எச்1)

| தீர்மான எண்:276 | நாள். 29.12.2022 |
|---|---|
| அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது | |

பொருள் 9

இடைப்பாடி நகராட்சிக்கு செந்தமான பொது கழிப்பறைகள் மற்றும் சமுதாய கழிப்பறைகளை பயன்படுத்துவோரின் கருத்துகளை தெரிவிக்க ஏதுவாக QR Code தயார் செய்யதும், மக்களுக்கான கழிப்பிடம், கழிப்பிடம் உபயோகிப்பவன் ''HERO'', திறந்தவெளி உபயோகிப்பவன் ''ZERO'' என்ற வாசகங்கள் அடங்கிய சுவர் விளம்பரம் அனைத்து பொது கழிப்பறைகள் மற்றும் சமுதாய கழிப்பறைகளில் பொருத்துமாறு, நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின், கடிதம் ந.க.எண்31420/2022/தூ.இ.தி2 நாள் 17.11.2022–ல் அறிவுருத்தப்பட்டது, அதன்படி இந்நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளிலும் உள்ள ஒரு பொது கழிப்பறை மற்றும் 34 சமுதாய கழிப்பறைகளில் QR Code தயார்

செய்து பொருத்தவும், மேற்படி வாசகங்கள் அடங்கிய சுவர் விளம்பரம் வரையவும் ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ60000/—க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலககுறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண் 1895/2021/எச்1)

| தீர்மான எண்:277 | நாள். 29.12.2022 |
|---|---|
| அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது | |

பொருள் 10

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் உள்ள TATA ACE. TN.52.M.9381 வாகனத்தில் நான்கு டயர்கள் மற்றும் டியூப்கள் புதிதாக கொள்முதல் செய்ய மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றது அதன் ஒப்பு நோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு,

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | பணியின் விபரம் | தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | SENTHUR CARS WHEEL ALIGNMENT & TYRES,IDAPPADI | இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உள்ள TATA ACE.TN.52.M.9381 வாகனத்தில் நான்கு டயர்கள் மற்றும் டியூப்கள் புதிதாக வழங்குதல் | ரூ15850/— |
| 2 | SRI KUMARAVEL TYRES IDAPPADI | | ரூ16950/— |
| 3 | SHRI SELVALAKSHMI TYRES, IDAPPADI | | ரூ17800/— |

மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் SENTHUR CARS WHEEL ALIGNMENT & TYRES IDAPPADI என்ற நிறுவனம் மற்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியைவிட குறைவாக உள்ளதை ஏற்று மேற்படி நிறுவனத்தில் TATA ACE வாகனத்தில் நான்கு டயர்கள் மற்றும் டியூப்கள் புதிதாக வழங்கிக் கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது
அலுவலக குறிப்பு –மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண் 1003/2020/எச்1)

| தீர்மான எண்:278 | நாள். 29.12.2022 |
|---|---|
| அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது | |

பொருள் 11

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் டெங்கு ஒழிப்புபணிகளை மேற்கொள்ள தேவையான மலேரியா பணியாளர்கள் இல்லாததால், வெளிக்கொணர்வு (Out sourcing) மூலம் வாகை மகளிர் சுய உதவிக் குழு மூலமாக, மாவட்ட ஆட்சித் தலைவர் சேலம், அவர்களால் அவ்வப்போது அரசிதழில் வெளியிடப்படும் தினக்கூலி அடிப்படையில் 15 பணியாளர்களை விநியோகம் செய்யும் பணிகாலம் 31.01.2023—ம் தேதியுடன் முடிவடையவுள்ளது. பொது சுகாதார டெங்கு ஒழிப்பு பணி மற்றும் கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள இயலாத சூழ்நிலை ஏற்படும் என்பதால் 01.02.2023 முதல் 30.04.2023 வரை வாகை மகளிர் சுய உதவிக்குழுவிற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட ஊதியத்தின் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கவும், மேற்படி இப்பணிகளுக்கு ஏற்படும் உத்தேச செலவினம் ரூ5.00/— லட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படிசெலவினம் பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 38/2021/எச்1)

| தீர்மான எண்:279 | நாள். 29.12.2022 |
|---|---|
| அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது | |

பொருள் 12

இடைப்பாடி நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு JCB வாகனம் எண் TN52Y2066 யை ஆயில் சர்வீஸ் மற்றும் பழுதடைந்து உதிரி பாகங்கள் மாற்றி சர்வீஸ் செய்ய அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் M/S Surya Bala Earth Movers Salem அவர்களிடம் மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.180000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவு தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2067/2019/எச்1)

| தீர்மான எண்:280 | நாள். 29.12.2022 |
|---|---|
| அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது | |

பொருள் 13

இடைப்பாடி நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 30 வார்டுகளிலும் 100 சதவீதம் திறந்த வெளியில் மலம் கழித்தல் ( Open Defecation Free ) இல்லாத நகராட்சி என பிரகடனம் செய்யவும், திடக்கழிவு மேலாண்மை மற்றும் கையாலுதல் சட்டம் 2016 ன் கீழ் மத்திய அரசின் (MOUD) துறையினர் (3 Star Rating) பெற, இந்நகராட்சி குப்பையில்லா நகராட்சியாக (Garbage Free city) சுய உறுதிமொழி சான்றிதழ் (Self Declaration) ஆகிய இரண்டு அறிவிப்புகளும் தினசரி நாளிதழில் வெளியிடவும் அதற்கான உத்தேச செலவினம் தொகை ரூ.26000/—க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு –

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி சுய உறுதிமொழி சான்றிதழ் (Self Declaration) மற்றும் இரண்டு அறிவிப்புகளும் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தினசரி நாளிதழில் வெளியிடதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

| தீர்மான எண்:281 | நாள். 29.12.2022 |
|---|---|
| அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது | |

(ந.க.எண்.22/2017/எச்1)

பொருள் 14

இடைப்பாடி நகராட்சி எல்லைக்குட்பட்ட 30 வார்டுகளிலும் ஆக்கிரமிப்பு சம்மந்தமாக வரப்பெறும் மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு சம்மந்தப்பட்ட புலத்தினை அளக்க வட்டாட்சியர் அலுவலக நில அளவையர் கொண்டு அளக்கப்படுவதால் ஒவ்வொரு புல எண்ணிற்கும் ரூ.800/—தொகை செலுத்த வேண்டியுள்ளது, எனவே மார்ச் 2023 வரை மூன்று மாதங்களுக்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.10000/—ஐ மன்ற அனுமதிக்கும், மேலும் இந்நகராட்சியில் நகர சார் ஆய்வாளர் பணியிடம் இல்லாத காரணத்தால் பொது மக்களிடமிருந்து வரப்பெறும் மனுக்களை நகர சார் ஆய்வாளர் மூலம் பணி மேற்கொள்ள வேண்டி உள்ளதால், அவசர அவசியம் கருதி இந்நகராட்சிக்கு நகர சார் ஆய்வாளர் ஒருவரை (Deputation) மூலமாகவோ அல்லது நகர் சார் ஆய்வாளர் பணியிடத்தினை இந்நகராட்சியில் புதியதாக தோற்றுவிக்க கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் சேலம் ஆகியோர்களுக்கு பிரேரணைகள் தயார் செய்து அனுப்ப மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு— மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 4786/2018/அ2

| தீர்மான எண்:282 | நாள். 29.12.2022 |
|---|---|
| அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது | |

பொருள் 15

இடைப்பாடி நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளில் அமைந்துள்ள 26 மேல்நிலை நீர் தேக்க தொட்டிகளின் மூலம் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய வால்வு திருப்புனர் மற்றும் மேல்நிலை தொட்டிகளை இயக்கி பராமரிப்பு பணிகளை ஒப்பந்த அடிப்படையில் 14 எண்ணிக்கை பணியாளர்களை சப்ளை செய்யும் பணிக்கு 01.11.2022 முதல் 31.01.2023 வரை ஜூரி எண்டர்பிரைசர்ஸ், சேலம்,

ஒப்பந்ததாரருக்கு கால நீட்டிப்பு செய்து பணி உத்திரவு வழங்கப்பட்டு ஒப்பந்ததாரர் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. 31.01.2023வுடன் மேற்படி பணி உத்தரவு காலம் முடிவடைவதால் மேற்படி பணிக்கு 01.02.2023 முதல் 31.05.2023 வரை 4 மாதங்களுக்கு 14 எண்ணிக்கை பராமரிப்பு உதவியாளர்களை கொண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.8,10,000/–க்கு ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேறகண்ட செலவுத்தொகை ரூ.8,10,000/–யை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்: 1854/2022/இ1)**

| தீர்மான எண்:283 | நாள். 29.12.2022 |
|---|---|
| அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது | |

பொருள் 16

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 22 பூலாம்பட்டி சாலையில் அமைந்துள்ள தரைமட்டத் தொட்டி(GLR) மற்றும் வீட்டு வசதி வாரியத்தில் அமைந்துள்ள நீரேற்று நிலையம் ஆகிய இரண்டு இடங்களில் உள்ள மின் மோட்டாரில் 1) 16Hp Motor Pump சந்தைப்பேட்டை OHT, 2) 20Hp Motor Pump வெள்ளாண்டிவலசு OHT, 3) 10Hp Submersible Motor Pump, 4) 20Hp Motor Pump GLR மற்றும் 6) Motor Starter-களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை தேவையான உதிரி பாகங்கள் கொண்டு சரி செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4.50 இலட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>**அலுவலககுறிப்பு**</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது மக்கள் அத்தியாவசிய நலன் கருதி மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள ஆகும் செலவுத் தொகை ரூ.4,50,000/–யை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் 1864/2022/இ1)**

| தீர்மான எண்:284 | நாள். 29.12.2022 |
|---|---|
| அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது | |

பொருள் 17

இடைப்பாடி நகராட்சி பொறியியல் பிரிவு பராமாரிப்பில் உள்ள குடிநீர் லாரி வாகனம் எண். TN27V4193க்கு ஆண்டு தகுதிச்சான்று 28.11.2022ம் தேதி முடிவடைவதால் 30.11.2022 முதல் ஓரண்டிற்கு புதுப்பிக்கும் பொருட்டு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் செலுத்தப்படும் கட்டணம் மற்றும் வாகனத்தை சர்வீஸ் செய்தும், ஏற்பட்டுள்ள பழுதுகளை நிவர்த்தி செய்ய ஆகும் செலவு தொகை ரூ.95,000/–க்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவு தொகையை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1308/இ2/2022**

| தீர்மான எண்:285 | நாள். 29.12.2022 |
|---|---|
| அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது | |

பொருள் 18

இடைப்பாடி நகராட்சியில் பொதுசுகாதார பிரிவில் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள வாகனங்களை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர விளம்பரத்தினை மாவட்ட அளவிலான ஒரு தமிழ் தினசரி நாளிதழில் அரசு நிர்ணயத்துள்ள படி சிறிய அளவில் விளம்பரம் செய்தமைக்கு கீழ்காணும் நாழிதழ் நிறுவனத்திற்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | நாளிதழ் பெயர் | பட்டியல் எண் / தேதி | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | தினச்சூரியன் | 7355 / 24.11.2022 | ரூ.9975.00 |

அலுவலககுறிப்பு:

1. மன்றம் அனுமதிக்காலம்
2. மேற்கண்ட செலவுத் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.298/2020/எச்1

| தீர்மான எண்:286 | நாள். 29.12.2022 |
|---|---|
| அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது | |

பொருள் 19

இந்நகராட்சி அலுவலகத்திற்கு ஈப்பு வாகனம் எண்.TN52R1779க்கு சர்வீஸ் பணிகள் மற்றும் பழுது சரிசெய்தல் பணிகள் மேற்கொள்ள அரசு அங்கீகராம் பெற்ற SKS இந்தியா பிரைவெட் லிமிடெட், சேலம் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.20,000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை எடுத்ததை மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட செலவு தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 851/20202இ2)

| தீர்மான எண்:287 | நாள். 29.12.2022 |
|---|---|
| அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது | |

பொருள் 20

இடைப்பாடி நகராட்சி 2022–2023ம் ஆண்டு குடிநீர் நிதியில் கீழ்கண்ட பணியை மேற்கொள்ள நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று 15.11.2022ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கீழ்கண்ட விபரப்படி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | JICA புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டத்தில் செய்து முடிக்கப்பட்ட தலைமை நீரேற்று நிலையம், வீட்டு வசதிவாரிய நீர்த்தேக்கதொட்டி பராமரிப்பு மற்றும் பிரதான குழாய்கள் பராமரிப்பு ஆகிய பணிகளை ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை கொண்டு பராமரிப்பு பணிகள் செய்தல் (நவம்பர் 2022 முதல் மார்ச் 2023) | 9.50 | ஜஸ்ரி எண்டர்பிரைசர்ஸ், சேலம் | மதிப்பீட்டை விட 0.15 சதவீதம் குறைவு |
| | | | ஸ்ரீ கணேசா & கோ மேட்டூர் | மதிப்பீட்டை விட 0.18 சதவீதம் அதிகம் |

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அத்தியாவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும், 15.11.2022 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.15 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி

கொடுத்துள்ள ஐஃரி எண்டர்பிரைசர்ஸ், சேலம். ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

3. மேற்கண்ட பணியை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்காலம்

(ந.க.எண். 225/2022/இ2)

| தீர்மான எண்:288 | நாள். 29.12.2022 |
|---|---|
| அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது | |

பொருள் 21

நகராட்சி நிர்வாக இயக்குநரக கண்காணிப்பு பொறியாளர், சென்னை அவர்களின் தொலைபேசி வழி அறிவுரையில் இடைப்பாடி நகராட்சிகுட்பட்ட வார்டு எண்.15 பேருந்து நிலையத்தில் வார்டு இ, பிளாக் 9,10,19 சர்வே எண். 83/(A1,A2,A4,A5), 84/2A2–ல் இடத்தில் ரூ.500.00 இலட்சம் மதிப்பீட்டில்பழுதடைந்த பழைய பேருந்து நிலைய கட்டிடங்களை இடித்துவிட்டு புதிய பேருந்து நிலைய கட்டிடம் கட்ட இருப்பதால் மேலும் இரண்டு இடங்களில் மண் பரிசோதனை செய்ய தெரிவிக்கப்பட்டதற்கிணங்க, மேற்படி இடத்தினை ஆய்வு செய்து கூடுதலாக இரண்டு இடங்களில் மண் பரிசோதனை (Soil Test) செய்தும், பரிசோதனை அறிக்கையை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டியுள்ளதை கருதி அரசினர் பொறியியல் கல்லூரி, தர்மபுரி அவர்கள் மூலம் ஆய்வு செய்ய நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டதையும், அதற்கான பரிசோதனை கட்டணம் ரூ.16,520/–யை பட்டியல் எண் D001 / 2022–23, நாள்.08.12.2022ன் படி முதல்வர், அரசினர் பொறியியல் கல்லூரி, தர்மபுரி அவர்களுக்கு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் மண் பரிசோதனை (Soil Test) செய்தல் பணி அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டதையும், அதற்கான பரிசோதனை கட்டணம் வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. மேற்காணும் செலவுத் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 421/2022/இ2

| தீர்மான எண்:289 | நாள். 29.12.2022 |
|---|---|
| அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது | |

பொருள் 22

இந்நகராட்சிக்கு சொந்தமான ஜலகண்டாபுரம் சாலையில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான நவீன மின்மயாத்தில் சடலங்கள் எரியூட்டும் பகுதி முற்றிலும் பழுதடைந்துள்ளது. மேலும், புகைபோக்கியும் (Chimney) பழுது ஏற்பட்டு உடைந்து பயன்படுத்த இயலாத வகையில் உள்ளது. எனவே, மின்மயானத்தில் ஏற்பட்டுள்ள கீழ்காணும் கட்டிட புணரமைப்பு பணிகள் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.8.10 இலட்சம் மற்றும் புகைபோக்கி (Chimney) சீரமைப்பு பணிகள் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.12.50 இலட்சத்திற்கும் எதிர்வரும் 2022–2023ம் ஆண்டு ஏதேனும் அரசு திட்டத்தின் கீழ் நிதி பெற்று பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் விபரம் |
|---|---|
| 1 | Service and replacement of Manual Body Holding Trolly, Wheels, Bearing Etc., |
| 2. | Supply and Fixing of Body Placing Bed |
| 3. | Service and Fixing LPG Pipe Lines. |
| 4. | Pipelines and ducting-Crematorium chamber to venture scrubber, Venture Scrubber to Chimney, Service and replacement of smoke outgoing line Etc., |
| 5. | New Chimney Fixing work. |

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்காணும் செலவினத்தை 15வது நிதி குழு 2022–2023ல் கீழ் ஏதேனும் அரசு திட்டத்தின் கீழ் நிதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 1648 /2022/இ2

| தீர்மான எண்:290 | நாள். 25.08.2022 |
|---|---|
| அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது | |

பொருள் 23

இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.25, ஆலச்சம்பாளையம் மாரியம்மன் கோயில் தெற்கு பகுதியில் புதிதாக மழைநீர் வடிகால் வசதி செய்யவும் மற்றும் மேல்நிலை நீர்தேக்க தொட்டி அருகில் உள்ள பள்ளமான சாலையில் மழைநீர் தேங்குவதை தடுக்க சாலையினை சீரமைக்க நகரமன்ற உறுப்பினர் அவர்களின் விண்ணப்பத்தில் கோரியுள்ளதன் படி, இடத்தை நேராய்வு செய்யப்பட்டதில் ஆலச்சம்பாளையம் தெற்கு பகுதியில் புதிதாக மழைநீர் வடிகால் வசதி செய்ய வேண்டியுள்ளது. மேலும், மேல்நிலை நீர்தேக்க தொட்டி அருகில் உள்ள பள்ளமான சிமெண்ட் சாலையில் மழைகாலங்களில் மழைநீர் தேங்கி வருதால் அதை சீர் செய்யவும் வேண்டியுள்ளது. எனவே, கீழ்காணும் பட்டியலின் படி தயாரிக்கபட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.8.65 இலட்சத்திற்கு எதிர்வரும் 2022–2023ம் ஆண்டு ஏதேனும் அரசு திட்டடத்தின் கீழ் நிதி பெற்று பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | வார்டு எண்.25, ஆலச்சம்பாளையம் மாரியம்மன் கோவில் தெற்கு பகுதியில் புதிதாக மழைநீர் வடிகால் வசதி செய்தல் பணி. | ரூ.6.50 |
| 2. | வார்டு எண்.25, ஆலச்சம்பாளையம் மேல்நிலை நீர்தேக்க தொட்டி அருகில் உள்ள சிமெண்ட் சாலையை சீரமைப்பு செய்தல் பணி. | ரூ.2.15 |
| | **மொத்தம்** | **ரூ.8.65** |

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்காணும் செலவினத்தை எதிர்வரும் 2022–2023ம் ஆண்டு ஏதேனும் அரசு திட்டத்தின் கீழ் நிதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 1648 /2022/இ2

| தீர்மான எண்:291 | நாள். 29.12.2022 |
|---|---|
| அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது | |

பொருள் 24

இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.25, ஆலச்சம்பாளையம் இடுகாடு பகுதி ஆய்வு செய்யப்பட்டது, இப்பகுதியின் தென்புறம் வழியே சுமார் 120 மீட்டர் நீளத்திற்கு புதிதாக மழைநீர் வடிகால் வசதி மற்றும் சிறுபாலங்கள், முன்னேற்றப் பணிகள் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.9.10 இலட்சத்திற்கு எதிர்வரும் 2022–2023ம் ஆண்டு ஏதேனும் அரசு திட்டடத்தின் கீழ் நிதி பெற்று பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்காணும் செலவினத்தை எதிர்வரும் 2022–2023ம் ஆண்டு ஏதேனும் அரசு திட்டத்தின் கீழ் நிதி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 1648 /2022/இ2

| தீர்மான எண்:292 | நாள். 29.12.2022 |
|---|---|
| அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது | |

பொருள் 25

மாவட்ட ஆட்சியர், சேலம் அவர்களின் நேரடி அறிவுரையின் படி வடகிழக்கு மழை காரணமாக இடைப்பாடி நகராட்சியில் உள்ள சரபங்கா ஆற்றில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக பொதுமக்களின் நலன் கருதி நகராட்சி எல்லைக்குட்பட்ட சரபங்கா ஆற்றுக் கரையோரப் பகுதியில் அவரச அவசியம் கருதி "எச்சரிக்கை பலகை" ஐந்து இடங்களில் வைக்க அறிவிக்கப்பட்டதற்கிணங்க சரபங்கா ஆற்றுக்

கரையோரப் பகுதியில் ஐந்து இடங்களில் "எச்சரிக்கை பலகை" வைக்கப்பட்டற்கு செலவு தொகை ரூ.20,000/– மற்றும் சேலம் மாவட்டம் மக்கள் செய்தி தொடர்பு துறை சார்பாக தமிழக அரசின் காலை உணவு திட்டத்தினை பொது மக்கள் அறியும் வண்ணம் இடைப்பாடி நகராட்சி பேருந்து நிலையத்தில் பிளக்ஸ் பேனர் அமைக்கப்பட்டதற்கு செலவு தொகை ரூ.15,000/– ஆக மொத்தம் ரூ.35,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவு தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 1829 /2022/இ2

| தீர்மான எண்:293 | நாள். 29.12.2022 |
|---|---|
| அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது | |

பொருள் 26

இடைப்பாடி நகராட்சி வார்டு எண்.2 வெள்ளார்நாயக்கன்பாளையம் பகுதியில் கழிப்பிட வசதி செய்து தர கோரி 2வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் விண்ணப்பத்தில் கோரப்பட்டதன் படி மேற்படி இடத்தை நேரில் ஆய்வு செய்யப்பட்டது. ஏற்கனவே உள்ள கம்பர்சர் மோட்டார் பழதடைந்து தண்ணீர் வசதி இன்றி உள்ளது. எனவே, ஆழ்துளை கிணற்றில் புதிய மின்விசை மோட்டார் பொருத்தி கழிப்பிடத்திற்கு தண்ணீர் வசதி செய்யவும், கழிப்பிடத்தில் ஆண்கள் மற்றும் பெண்கள் பகுதியில் நடுச்சுவர் உயரம் குறைவாக உள்ளதால் சுவற்றின் உயரத்தை அதிகம் படுத்தவும் ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.1,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்காலம்
2. மேற்கண்ட செலவு தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண். 1190/2022/இ2

| தீர்மான எண்:294 | நாள். 29.12.2022 |
|---|---|
| அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது | |

பொருள் 27

இந்நகராட்சியின் வரி மற்றும் வரியில்லா இனங்களின் தீவிர வசூல் பணி பாதிக்காத வகையில் பழைய நகராட்சி அலுவலகம் மற்றும் புதிய நகராட்சி அலுவலகத்தில் செயல்பட்டு வரும் கணினி வசூல் மையத்திற்கு கூடுதலாக 2 எண்ணிக்கையில் Dot Matrix Printer, 1 எண்ணிக்கையில் கணிப்பொறி மற்றும் 1 எண்ணிக்கையில் சிறிய Laser Printer கீழ்காணும் தரத்தில் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,50,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | விபரம் | எண்ணிக்கைகள் |
|---|---|---|
| 1. | TVS-MSP 450 STAR 80 Column Dot Matrix Printer | 2 Nos |
| 2. | All in one Computer 12th Gen i3 / 8GB / 1TB-256GB SSD / Win 11/M8S Office / 24" FHD / Wireless K & M / Popup web Camara with 1 Year Warranty | 1 No |
| 3. | HP Laser Pro P 1108 Printer | 1 No |

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்காணும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

| தீர்மான எண்:295 | நாள். 29.12.2022 |
|---|---|
| அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது | |

ஆணையாளர்,
இடைப்பாடி நகராட்சி